**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.

Prosecution witness for P.W. 16.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. அழகம்மாள். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

A1, A2 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குருவிகுளத்தில் குடியிருந்து தீப்பெட்டி அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 25.03.2019 அன்று காலை 9 மணியளவில் நானும், நாகஜோதி என்பவரும் விநாயகா தீப்பெட்டி நிறுவன அலுவலகம் அருகே சென்று கொண்டிருந்தபோது 1, 2 எதிரிகள் மறைவாக நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டபோது அவர்கள் எப்படியாவது 2ம் எதிரியின் கணவர் ராமநாதன் என்பவரை மதுபானத்தில் விஷம் கொடுத்து கொல்ல வேண்டுமென்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்ததாகவும், பின்னர் 31.03.2019 அன்று மேற்படி சதித்திட்டத்தின்படி ஊருக்கு வந்த

இராமநாதனை 1ம் எதிரியும், இளஞ்சிறார் எதிரியும் கல்லூரணி பக்கம் அவரை கடத்திச் சென்று அதிகப்படியான மதுபானம் கொடுத்து கல்லால் தலையில் அடித்து கொலை செய்து அங்கு போட்டுவிட்டதாக நான் கேள்விப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.11 18:08:18 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.

Prosecution witness for P.W. 17.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராமர். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

A1, A2 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ராமலிங்கபுரத்தில் குடியிருந்து கட்டிட ஒப்பந்ததாரராக தொழில் செய்து வருகிறேன். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஊர்த்தலைவராக இருந்தபோது போலீசார் என்னை காவல்நிலையம் அழைத்து என்னிடம் சில வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 2 மற்றும் 3**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 16.04.2019 அன்று இரவு 7.50 மணியளவில் நானும், காளிராஜ் என்பவரும் வானரமுட்டி பேருந்து நிறுத்தம் அருகே வந்து கொண்டிருந்தபோது போலீசார் 1ம் எதிரியை கைது செய்து விசாரித்தபோது

1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றதாகவும், அதன் அடிப்படையில் 1ம் எதிரி தனது இருசக்கர வாகனத்தில் டேங்க் கவரில் இருந்த இறந்துபோன ராமநாதனின் கைபேசி மற்றும் கல்லூரணி காட்டுப்பகுதியில் இருந்த இருசக்கர வாகனம் மற்றும் சாம்சங் கைபேசி ஆகியவற்றை எங்கள் முன்பாக ஆஜர் செய்தபோது போலீசார் மகஜரில் கைப்பற்றியபோது நாங்கள் இருவரும் அதில் கையொப்பமிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.11 18:08:29 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.